**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண். 348/2020</u>**

**நாள்– 19.08.2025**

**வா.சா. 2– திரு.M. ராமசாமி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் எனது சொந்த பூமியில் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சுமார் 5,6 ஏக்கர் நிலம் சொந்தமாக எலந்தகுட்டை கிராமத்தில் உள்ளது. எனது பூர்வீக வீடு ரங்கனூரில் எனது தோட்டத்திலேயே உள்ளது. ஒரு ரங்கையக் கவுண்டருடைய வீடு எங்கு உள்ளது என்றால் தாவா சொத்தில் உள்ளது. ரங்கையக் கவுண்டருடைய வீடு தாவா சொத்தில் உள்ளதாக வழக்கிற்காகப் பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அரசு வேம்பு விநாயகர் கோவில் எப்போது கட்டப்பட்டது என்றால் முத்துச்சாமி கவுண்டர் காலத்தில் கட்டப்பட்டது. முதல் பூஜை அரசு வேம்பு விநாயகர் கோவிலுக்குத்தான் என்றால் சரிதான். முத்துச்சாமி கவுண்டர் காலத்திற்கு முன்பிருந்தே மேற்படி கோவில் இருந்தது என்றாலும் அதனால்தான் அந்தக் கோவிலுக்கு முதல் பூஜை என்றாலும் சரியல்ல.

2) ரங்கனூரில் முதலில் உருவான கோவில் எது என்றால் அரசு வேம்பு விநாயகர் கோவில் தான். வேலாத்தா கோவிலின் தர்மகர்த்தா யார் யார் என்றால் T.ராமசாமி ஆவார். அதற்குரிய ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது, இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரங்கையக் கவுண்டர் தனது சொந்த செலவில் தாவா கோவில் கட்டினார் என்பதற்கு ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. ரங்கையக் கவுண்டர் முப்பட்டனார் முதன் முதலில் எந்தக் கோவிலுக்கு பூஜை செய்வார் என்றால் தாவா கோவிலுக்குதான். ரங்கையக் கவுண்டரால் கோவில் ஸ்தாபிக்கப்பட்டது என்பதும் அவர் குடும்பத்தினர் வழிபட்டனர் என்பதும், தாவா கோவில் ரங்கையக் கவுண்டரின் குடும்பக் கோவில் என்பதும், அதற்கு முதல் பூஜை செய்தார்கள் என்பதும் பொய் என்றால் சரியல்ல.

3) எங்கள் ஊரில் ரங்கையக் கவுண்டர் காலத்தில் அனைத்து ஜாதியினரும் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். போயர் சமுதாயத்தினரும் இருந்தார்கள் என்றால் சரியல்ல, எனது தந்தை காலத்தில்தான் ஊருக்கு

வந்தார்கள். போயர் சமுதாயத்தினர் எனது முப்பாட்டனார் ரங்கையக் கவுண்டர் காலத்தில் இருந்தே ஊரில் இருந்து வருகிறார்கள், அதற்கான ஆவணங்களும் உள்ளது ஆனால் எனது தாத்தா வரதப்ப கவுண்டர் காலத்தில் தான் வந்தார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா கோவிலைக் கட்டியதே போயர் சமுதாயத்தினர்தான் என்றாலும், எங்கள் சமுதாயத்தினர் கட்டவில்லை என்றாலும் சரியல்ல. எனது பிரமாணப் பத்திரிக்கையில் கூறியுள்ளபடி ஜாதி வழக்கப்படி செய்யப்படவேண்டிய காரியங்களுக்காக பண்டாரம், தாசன், சங்கோதி ஆகியோர் அந்த ஊரில் குடியமர்த்தப்பட்டனர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளதா என்றால் இல்லை.

4) தாவா கோவில் ரங்கனூர் மக்களுக்கு உரியது என்றாலும் வேட்டுவக் கவுண்டர்களுக்கு உரியதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் ஊரில் போயர் சமுதாயத்தினர் தனியாகக் கோவில் கட்டியுள்ளார்கள் என்று பொய்யாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1900 வருடத்திற்கு முன்பிருந்தே எனது பங்காளிகளுக்கு உரிய நிலங்கள் தாவா கோவிலின் நான்கு திசையிலும் உள்ளது என்று கூறும் நிலையில் யார் யாருக்கு நிலங்கள் உள்ளது என்றால் மூன்று பாட்டனார்கள் ரங்கசாமி கவுண்டர், ஆறுமுகக் கவுண்டர், வருதப்பக் கவுண்டர் ஆகியோரின் வாரிசுகளுக்கு நிலங்கள் உள்ளது. அதற்கான ஆவணங்களைத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவர்களைத் தவிர மற்றவர்களுக்கு தாவா கோவிலைச் சுற்றி பூமி உள்ளதா என்றால் உள்ளது. கோவிலுக்குச் சுற்றியுள்ள அனைத்து நிலங்களும் அரசுப் புறம்போக்கு நிலங்கள் என்றால் சரியல்ல, கிராம நத்த நிலமாகும்.

5) குமாரசாமி ஐயருக்கு அடமானம் வைத்த சொத்துக்களைப் பொறுத்து அடமானத்தை நீக்கம் செய்த ஆவணத்தை தாக்கல் செய்யாததால் இன்றும் குமாரசாமி ஐயருக்குதான் அந்த நிலங்கள் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது பிரமாணப் பத்திரிக்கையில் பத்தி 9 ல் கூறியுள்ள மீதம் இரண்டு பத்திரங்கள் பாக கறார் செய்த பத்திரங்கள் ஆகும். எனது பிரமாணப் பத்திரிக்கையில் பத்தி 9 ல் கூறியுள்ள மூன்று பத்திரங்களில் பூஜை காரியங்கள் செய்வதற்காக என்று கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பூஜை காரியங்களுக்காக தாவா கோவிலின் கிழபுறம் இடம் விட்டுள்ளதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை அது அரசுப் புறம்போக்கு நிலமாகும்.

6) நான் கோவிலுக்கு எந்தப் பக்கம் பொங்கல் வைப்பேன் என்றால் கிழபுறம் இருக்கும் புறம்போக்கு நிலத்தில் வைப்பேன். கோவிலுக்குக் கிழபுறம்

நடைபெறும் கட்டுமானத்திற்கு கோவில் வருமானத்தை பயன்படுத்துகிறோம் என்றால் சரியல்ல. மேற்படி கட்டுமானத்திற்கு தென்புறம்தான் கட்டுமானப் பொருட்களை வைத்துள்ளோம் என்றால் சரியல்ல, வடபுறம்தான் வைத்துள்ளோம். பொட்டுசாமி ஓங்காளியம்மன் கோவில் தற்போது பராமரிப்பின்றி மண் மூடி உள்ளது என்றால் சரியல்ல, வழிபாடு நடந்து கொண்டுதான் இருக்கிறது. 1930ம் ஆண்டு ரங்கசாமி கவுண்டர் அவர்கள் கல்மண்டபம் கட்டியதற்கான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. மின் இணைப்பில் தர்மகர்த்தா குப்புசாமி என்று கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் உள்ளது, பார்த்தால்தான் தெரியும்.

7) பத்தி 13ல் 1963–64 , 1973–74 மற்றும் 2003ம் ஆண்டுகளில் கும்பாபிஷேகம் மற்றும் முன் மண்டபம் கட்டப்பட்டது மற்றும் அதன் அனைத்து நிர்வாகமும் பங்காளிகளால் செய்யப்பட்டது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளதா என்றால் 2003ம் ஆண்டு செய்யப்பட்ட கும்பாபிஷேகத்திற்கு ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு கவுண்டர் குடும்பத்திற்கும் ஒரு தொட்டிய நாயக்கர் கோசாங்கி குடும்பத்திற்கும் பிரச்சனை நடந்தது என்றால் கவுண்டர் சமுதாயத்தினருக்கு பொதுவாகவும் தொட்டிய நாயக்கர் கோசாங்கி சமுதாயத்தைச் சேர்ந்த பட்டயக்காரர் ராஜேந்திரன் என்பவருக்கும் பெயர் தெரியாத சிலருக்கும் இடையில் தான் நடந்தது. பட்டயக்காரர் ராஜேந்திரன் மீது புகார் ஏதேனும் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. கோவிலில் என்ன தகராறு செய்தார் என்றால் முதல் நீரை பட்டயக்காரர் ராஜேந்திரனின் உறவினர்கள் எடுத்ததில் தகராறு ஏற்பட்டது. அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாகச் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**